முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கோரக்கர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.03.2019, புதன்கிழமை

1. **அருட்பெருஞ் சுடராக பரவி**
**அறமாக ஞான விளக்கமாக**
**அருட்சக்தியாக ஆறுமுகனாகவே**
**அவதாரம் எடுத்த அரங்கராசா**
2. அரசனே சரவண சோதி எனும்
ஆற்றலான ஞான ஒளி தானும்
பரவவே உலகம் மாறுமெனக் கூறி
பாடிடுவேன் நித்ய பிரசன்ன ஆசியை
3. ஆசியை **விளம்பி சேலின் திங்கள்**
**அறிவிக்க சஷ்டி திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் பங்குனி மாதம் 6ம் நாள் 20.03.2019, புதன்கிழமை)**
**ஆசிபட கோரக்கர் யானும்**
அருளுவேன் உலகோர் நலம்பெற
4. நலம்பெற ஞானபலம் பெற
ஞானதேசிகன் அருளை பெற
வலம் வாரீர் குமரகிரியை
வணங்கி வாரீர் அறநெறியை
5. அறநெறி ஆறுமுகனார் காட்டும்
ஆற்றல்மிக்க ஞானநெறி
வரமென மக்களை உயர்த்தும்
வல்லமைமிக்க சிறந்த நெறி
6. நெறியென பிரணவக் குடிலில்
நிலைத்தன்மை அருளும்படி
ஆறுமுகனார் சூட்சும பலமாக
அரங்க ஞானியை கொண்டு இயக்க
7. இயக்கவே அரங்க ஞானியரின்
எல்லா செயல்களும் சேவைகளும்
தயக்கமிலா முருகப் பெருமானின்
தயவால் நடந்தேறிவர உலகே நலம் பெறும்
8. நலம் தரும் ஞானிகள் பூசையை
நன்மை தரும் அன்னதான சேவையை
பலம்பெற உலக மக்கள் ஏற்று
பரோபகாரம் மிக்க வழிமுறைகளை

9. முறையாக பின்பற்றி வருதலுற
முழுமைபட அரங்க மகானை
குருவாக ஏற்று மக்களெல்லாம்
குருதீட்சை அடைந்து தொடர்ந்துவர

10. வருகவே சரவண சோதி ஏற்றி
வடிவேலா வருக எனும்
முருகப்பெருமான் வழிபாட்டை
மூவுலகும் கேட்கும்படி செபிக்க

11. செபதபம் செய்து வருதலுடன்
சிறப்பான தருமமும் தொடர
அபயமென ஆறுமுகன் ஆளுமை வந்து
அகிலமே ஞான உலகமாகும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கோரக்கர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

வல்லமைமிக்க அருட்பெருஞ்ஜோதி சுடராக பரவி, அறசக்தியாக ஞானவிளக்கமாக அருட்சக்தி வடிவமாக முருகப்பெருமானாகவே அவதாரம் புரிந்த ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே ஞானஅரசனே சரவணஜோதி என்கிற ஆற்றலான ஞான ஒளியானது உலகமெலாம் பரவ பரவ, உலகமெலாம் அறியாமை இருள் நீங்கி ஞானஒளி பரவி உலக மாற்றமும் உண்டாகிடும் எனக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் பங்குனி மாதம் 6ம் நாள் 20.03.2019, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே கோரக்கர் யானும் உலக நலமுற நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே உரைக்கின்றேன் என்கிறார் மகான் கோரக்கமகரிஷி.

சகலவிதமான வளங்களையும் ஞானபலத்தினையும் பெற்று ஞானதேசிகன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளைப் பெற்றிட அவரவரும் உலக மாற்றம் கருதி முருகப்பெருமானால் அமைக்கப்பட்ட குமரகிரி தலத்தினை அணுகி வலம் வந்து, முருகப்பெருமானின் அருளைப் பெற்றிடவே குமரகிரியினை வணங்கிட வாரீர் வாரீர்.

உத்தம மகா ஞானி அரங்கமகாதேசிகன் கூறும் அறநெறியே ஆற்றல்மிக்க ஞானநெறியாகும். அதுவே மக்களுக்கு அற்புதமான வரமாகும். அத்தூய நெறியே மக்களை துன்பங்களில் இருந்து மீட்டு உயர்த்தும் வல்லமையான நெறியாகும்.

ஞானபீடமாய் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினில் நிலைத்தன்மையாகிய பிறப்பு இறப்பு இல்லாத மரணமிலாப் பெருவாழ்வை தந்தருளும்படியாக முருகப்பெருமானே சூட்சும வடிவினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரைச் சார்ந்து இயங்கி வருகின்றபடியினாலே ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சொல், செயல் சேவைகள் அனைத்தும் சற்றும் தடையின்றி முருகப்பெருமானின் அருளால் தயவினால் சிறப்புடன் நடந்தேறி வருகின்றதனால் அரங்கனின் சேவையினாலே இப்பேருலகமே எல்லா நலங்களையும் பெற்று சிறப்படையும்.

சகலவிதமான நலங்களையும் தருகின்ற சக்திமிக்க ஞானிகள் பூசைகளையும் சகல நன்மைகளையும் தந்தருளுகின்ற அன்னதான சேவைகளையும் மக்களெல்லாம் ஆன்மலாபம் பெறுதல் பொருட்டு, மனம் விரும்பி ஏற்றுக் கொண்டு பரோபகாரமாகிய ஜீவதயவு மிகுந்த வழிமுறைகளை முறையோடு ஏற்று பின்பற்றி வர வேண்டும். ஜீவகாருண்ய தலைவன் கலியுகத்தினை மாற்ற வந்துதித்த முருகப்பெருமானின் அவதாரம் வள்ளல் ஞானி கேட்டதெல்லாம் வரமளித்து

வழிநடத்தும் உண்மை ஞானகுருநாதன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அவரவரும் குருவாய் ஏற்றுக் கொண்டு குருநாதன் அரங்கரிடத்து குருதீட்சை உபதேசம் பெற்று அரங்கர் கூறும் உபதேசத்தினை பின்பற்றி வாழ்வினில் கடைப்பிடித்து வருவதுடன் அரங்கர் கூறும் ஜோதி வழிபாட்டினை சரவணஜோதி ஏற்றி வைத்து முருகப்பெருமான் சோதியில் வெளிப்பட்டு அருள் செய்யும் விதத்தினிலே மனம் உருகி முருகா, முருகா, முருகா, வருக, வருக, வருக, இப்பாவியேன் அழைப்பை ஏற்று சோதியினுள் தோன்றி எமக்கு அருள் புரியுங்கள் தாயே, தயாபரனே, தேவாதிதேவா, எம்பெருமானே, என் தெய்வமே, என் குருவே என பலவாறாய் மனம் உருகி வேண்டி மனம், புத்தி, சொல், உடல், ஆவி என அனைத்தும் ஒன்றுபடும் விதத்திலே தன்னிலை மறந்து மூவுலகினரும் கேட்கும்படி மனஉறுதியுடன் மனதினுள் பலமாய் தடுமாறாமல் ஒருமித்து வழிபாட்டினை முருகப்பெருமான் திருவடி மீது பதித்து சரணாகதியாக ஆகி செய்து வர வேண்டும்.

இவ்விதமே முருகப்பெருமான் மனம் குளிரும்படி பூஜைகளை செய்வதுடன் ஆன்மா பலம் பெறவும், ஆன்ம லாபம் பெற வேண்டியும், ஞானவீட்டின் திறவுகோலான ஜீவதயவை பெற்றிட வேண்டியும், தானங்களில் சிறந்ததான அன்னதான தருமத்தினை தொடர்ந்து விடாமல் செய்து வர வேண்டும். மக்கள் வழிபாடும் தருமமும் பெருக பெருக, அஞ்சேல் என ஆறுமுகப்பெருமானும் வெளிப்பட்டு துன்புறும் மக்களுக்கு அபயம் என்றே அருள்மழை பொழிந்து இவ்வுலகினில் ஆறுமுகப் பெருமானே நேரில் தோன்றி ஆட்சியினை நடத்திட இந்த பேருலகமே ஞான உலகமாக மாறிடும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கோரக்கமகரிஷி.

–சுபம்–